NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 14 June 2018

# அடுத்த இருபது ஆண்டுகளில் கண் நோய்கள் அதிகரிக்கக்கூடும்

சிங்கப்பூரில் கண் நோய் உடையவர்களின் எண்ணிக்கை அடுத்த 20 ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கக்கூடும் என உள்ளூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

இன வாரியாக பார்க்கும்போது, குறிப்பிட்ட சில கண் நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இரு மடங்கிற்கு மேல் அதிகரிக்கக்கூடும் என ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

'எப்பிரெட்டினல் மெம்ப்ரேன்' எனப்படும் ஒரு வகை கண் நோயால் இந்தியர்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் 112 விழுக்காடு அதிகரிக்கக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்படுவோரின் கண்களின் விழித்திரை மீது மெல்லிய சவ்வு வளர்வதால் கண் பார்வை மங்கலாகும்.

நீரிழிவால் ஏற்படும் 'டயபிட்டிக் ரெட்டினோபதி' எனப்படும் கண் நோயால் சீனர்களும் மலாய்க்காரர்களும் பாதிக்கப்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நோய் தொடர்பான சம்பவங்கள் சீனர்களிடையே 112 விழுக்காடும் மலாய்க்காரர்களிடையே 154 விழுக்காடும் அதிகரிக்கக்கூடும். இந்த ஆய்வை 'டியூக்–என்யுஎஸ்' மருத்துவப் பள்ளி, சிங்கப்பூர் தேசிய கண் நிலையம் உட்பட பல்வேறு கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மேற்கொண்டனர்.

சிங்கப்பூர் மருத்துவப் பயிலகம் இவ்வாண்டு ஜனவரியில் வெளியிட்ட இதழ் ஒன்றில் இந்த ஆய்வின் முடிவுகள் இடம்பெற்றன.

இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள், கண்புரை நோய், கண்விழி விறைப்பு நோய், கிட்டப்பார்வை உள்ளிட்ட பொதுவான எட்டு கண் நோய்களில் கவனம் செலுத்தினர். சிங்கப்பூரில் சீன, மலாய், இந்திய இனங்களைச் சேர்ந்த 10,000 பேரிடம் இந்த கண் நோய்கள் ஏற்பட்டதற்கான நிலவரத்தை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

இது குறித்து சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு கணினி முறை ஒன்றின் உதவியுடன் 2040க்குள் இத்தகைய கண் நோய்களால் சிங்கப்பூர் மக்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்படுவர் என முன்னுரைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் மக்கள்தொகை மூப்படைந்து வருவதாலும் அதிக நடமாட்டம் இல்லாத வாழ்க்கைமுறையை மக்கள் கடைபிடிப்பதாலும் இந்த ஆய்வின் முடிவுகள் ஆச்சரியம் தரக்கூடியவையாக இல்லை என மருத்துவர்கள் கருதுகின்றனர்.

உதாரணத்திற்கு, சிங்கப்பூரில் அதிகமானோரிடையே நீரிழிவு சம்பவங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், 'டயபிட்டிக் ரெட்டினோபதி' எனும் கண் நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் எனக் கூறினார் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையின் கண் அறுவை சிகிச்சை மையத்தில் பணிபுரியும் டாக்டர் சூ சின்யீ.

இந்தக் கண் நோய்கள் வரும்முன் கண்களைக் காப்பது முக்கியம் என வலிறுத்தினார் ஆய்வை மேற்கொண்டவர்களில் ஒருவரான பேராசிரியர் இகோசே லேமொரெக்ஸ். கண் சுகாதாரத்தில் நீண்டகால பலன்களைத் தரும் பழக்க வழக்கங்களை மக்கள் ஏற்படுத்திக்கொள்ள அவர் ஊக்குவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.